பத்திரிக்கைச் செய்தி வெளியீடு - 129

12.11.2026

லஞ்சம் கேட்டு பெற்ற வழக்கில் முன்னாள் வனக்காவலருக்கு 2 ஆண்டுகள் சிறை மற்றும் அபராதம் விதித்து தீர்ப்பு

கடந்த 2014-ம் ஆண்டு, நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், பன்னாள் பகுதியில் அமைந்துள்ள கபிலவனநாதர் திருக்கோவிலுக்கு சொந்தமான நிலத்தில் உள்ள சவுக்கு மரங்களை ஏலம் விடுவதற்கான மதிப்பீடு தயாரிக்கும் பணியை, கிராம நிர்வாக அலுவலர் மற்றும் திருக்கோயில் செயல் அலுவலர் ஆகியோர்களின் சான்றிதழ்களின் அடிப்படையில் புகார்தாரர் மேற்கொண்டார். இந்த பணியை செய்து முடிப்பதற்காக திரு.வேதமூர்த்தி, வனக்காவலர், வனச்சரக அலுவலகம், கோடியக்காடு பிரிவு, வேதாரண்யம் வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம் அவர்கள் தனக்கு ரூ.2,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, நாகப்பட்டினம் பிரிவில் அளித்த புகாரின்பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கை கடந்த 2014ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. பொறிவைப்பு நடவடிக்கையின்போது புகார்தாரரிடமிருந்து திரு.வேதமூர்த்தி, வனக்காவலர் அவர்கள் லஞ்சபணம் ரூ.2,000/- பெற்றபோது கைது செய்யப்பட்டார். இவ்வழக்கில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், நாகப்பட்டினம் மாவட்டத்தில் வழக்கு நடைபெற்று வந்தது. இன்று 12.11.2026ந் - தேதி திரு.வேதமூர்த்தி (வ/61), வனக்காவலர் அவர்களுக்கு 2 ஆண்டுகள் சாதாரண சிறை தண்டணையும் மற்றும் ரூ.10,000/- அபராதம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

PRESS RELEASE – 129
12.11.2026

FORMER FOREST WATCHER CONVICTED IN BRIBE CASE

During 2014, the complainant initiated the process of preparing an estimate for the auction of Casuarina trees based on the certificate issued by the Village Administrative Officer and the Executive Officer of Kabilavananather Temple, Pannal, Vedaraniyam Taluk, Nagapattinam District. In this regard, Tr.Vedamoorthy, Forest Watcher, Forest Range Office, Kodiyakkadu Section, Vedaraniyam Range, Nagapattinam District, demanded Rs.2,000/- as bribe from the complainant for processing the said work. The complainant not willing to give bribe, preferred complaint with Vigilance and Anti– Corruption, Nagapattinam Detachment. In this connection a trap was organized. During the trap proceedings, Tr.Vedamoorthy, Forest Watcher received the bribe amount of Rs.2,000/- from the complainant. The accused was arrested and remanded. On completion of investigation, the case was charge sheeted against the accused. Today 12.11.2026 the Principal District and Sessions Court Judge, Nagapattinam pronounced the judgment against Tr.Vedamoorthy (Age 61), Forest Watcher and sentenced him to undergo Simple Imprisonment for 2 years and fine of Rs.10,000/-.